தமிழ்நாடு அரசு
இந்து சமய அறநிலையத்துறை
அருள்மிகு வெட்டுடையார் காளியம்மன் திருக்கோயில், அரியாகுறிச்சி,
காளையார்கோயில் வட்டம் மற்றும் சிவகங்கை மாவட்டம்.

**பலவகை குத்தகை உரிமங்கள் – பசலி 1432 க்கான**
**(06.08.2022 முதல் 30.06.2023 முடிய)**
**டெண்டர் உள்ளிட்ட பொது ஏல அறிவிப்பு (முதல் அழைப்பு)**

இத்திருக்கோயிலுச்குச் சொந்தமான கீழ்க்காணும் பலவகைக் குத்தகை உரிமம் (காணிக்கை முடி சேகர உரிமம்) பசலி 1432க்கான (06.08.2022 முதல் 30.06.2023 முடிய) டெண்டர் உள்ளிட்ட பொது ஏலம் 15.06.2022 அன்று பிற்பகல் 3.00 மணி அளவில் சிவகங்கை, இந்து சமய அறநிலையத்துறை, இணை ஆணையர் அவர்கள் முன்னிலையில், இத்திருக்கோயில் அலுவலகத்தில் வைத்து ஆலய செயல் அலுவலரால் நடத்தப்பட உள்ளது.

**குத்தகை உரிமங்களின் விபரம்**

| வ.எண் | இனம் | முன் வைப்புத் தொகை | காலம் |
|---|---|---|---|
| 1 | காணிக்கை முடி சேகர உரிமம் | 5,00,000/– | **பசலி 1432 (06.08.2022 முதல் 30.06.2023 முடிய)** |

கீழ்க்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு மேற்படி டெண்டர் உள்ளிட்ட பொது ஏலத்தில் கலந்து கொள்ளலாமென அறிவிக்கப்படுகிறது.

**நிபந்தனைகள்**

1. டெண்டர் உள்ளிட்ட பொது ஏலத்தில் கலந்து கொள்ள விரும்புபவர்கள் தங்கள் கலந்து கொள்ளும் இனத்திற்குரிய முன்வைப்புத் தொகைக்கு ''**செயல் அலுவலர் அருள்மிகு வெட்டுடையார் காளியம்மன் திருக்கோயில், அரியாகுறிச்சி**'' என்ற பெயரில் 01.06.2022 ஆம் தேதி மற்றும் இதன் பின் தேதியிட்ட வங்கி வரைவோலை (ஒரே வரைவோலை) எடுத்து 15.06.2022 அன்று பிற்பகல் 2.00 மணிக்குள் ஆலய செயல் அலுவலரிடம் கொடுத்து ஒப்புதல் சீட்டு பெற்றுக் கொள்ள வேண்டும். ஒப்புதல் சீட்டு பெற்றுக் கொள்ளும் நபர்கள் மட்டும் ஏலம் நடத்தும் இடத்தில் அனுமதிக்கப்படுவார்கள்.
2. பொது ஏலத்தில் கலந்து கொள்பவர்கள் மேற்படி ஒப்புதல் சீட்டுடன் ஏலத்தின் போது ஆஜராக வேண்டும். ஏலத்தில் கலந்து கொள்வதுடன் டெண்டர் கொடுக்க விரும்பும் நபர்கள் ரூ 500/– (ரூபாய் ஐந்நூறு மட்டும்) செலுத்தி திருக்கோயில் அலுவலகத்தில் 01.06.2022 முதல் 04.06.2022, 06.06.2022 முதல் 11.06.2022 மற்றும் 13.06.2022, 14.06.2022 ஆகிய வேலை நாட்களில் முற்பகல் 10.00 மணி முதல் பிற்பகல் 5.00 மணி வரை டெண்டர் படிவம் பெற்றுக் கொள்ளலாம்.

1. டெண்டர் படிவத்தினை நிரப்பி, முன் வைப்புத் தொகை செலுத்தியதற்கான ஒப்புதல் சீட்டினை டெண்டர் படிவத்துடன் இணைத்து ஒரு உறையில் வைத்து மூடி முத்திரையிட்டு **15.06.2022** அன்று பிற்பகல் **2.30** மணிக்குள் திருக்கோயில் அலுவலகத்தில் வைத்துள்ள டெண்டர் பெட்டியில் போட்டு விட வேண்டும். உறையின் மீது அந்த இனத்திற்கான பெயர் விபரம் குறிப்பிட வேண்டும். மேற்படி காலக் கெடுவிற்குப் பின்னர் வரப்பெறும் டெண்டர்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.
2. டெண்டர் முன் வைப்புத் தொகை வங்கி வரைவோலையாக மட்டுமே பெறப்படும் ரொக்கமாகப் பெறப்படமாட்டாது.
3. டெண்டர் உள்ளிட்ட பொது ஏலத்தில் கலந்து கொள்பவர்கள் வருமானவரி கணக்கு எண் (PAN கார்டு) மற்றும் வணிகவரி பதிவுச் சான்று (TIN ) எண் இணைக்கப்பட வேண்டும்.
4. **15.06.2022** அன்று பிற்பகல் **3.00** மணி அளவில் திருக்கோயில் அலுவலகத்தில் வைத்து சிவகங்கை, இந்து சமய அறநிலையத்துறை, இணை ஆணையர் அவர்கள் முன்னிலையில் டெண்டர் உள்ளிட்ட பொது ஏலம் நடத்தப்படும். ஆஜராகும் ஏலதாரர்கள் மற்றும் டெண்டர்தாரர்கள் முன்னிலையில் முதலில் பொது ஏலம் நடத்தப்படும். ஏலத்தில் உயர்ந்த கேள்வி அறிந்ததும் அதற்கு மேல் கேள்வி ஏதும் இல்லை என ஊர்ஜிதம் செய்த பின்னர் ஏல நடவடிக்கையை நிறுத்தி அந்த இனத்திற்கும் வரப்பெற்றுள்ள டெண்டர்கள் திறக்கப்படும்.
5. டெண்டர் உள்ளிட்ட பொது ஏலத்தில் உயர்ந்த கேள்வி கேட்பவருக்கு இலாகா அங்கீகாரத்திற்குட்பட்டு மேற்படி இனம் முடிவு செய்யப்படும். தவறின் இதனால் ஏற்படக்கூடிய அனைத்து இழப்புகளையும் தவறிய உயர்ந்த கேள்வி கேட்வரே இத்திருக்கோயிலுக்கு செலுத்த வேண்டும்.
6. உயர்ந்த தொகைக்கு கேள்வி கேட்டு முடிவு செய்யப்பட்ட நபர் மேற்படி உயர்ந்த கேள்வித் தொகையினை உடன் செலுத்த வேண்டும்.
7. உரிமம் முடிவு செய்யப்பட்ட நபர் தமது சொந்தச் செலவில் குத்தகை உரிமம் பத்திரம் எழுதிக் கொடுக்க வேண்டும்.
8. ஏலம்/ டெண்டர் எடுத்தவர் அந்த இனத்திற்குரிய தொகை முழுவதையும் ஏலம்/டெண்டர் முடிந்தவுடன் அப்போது அவ்விடத்திலேயே கோயில் செயல் அலுவலரிடம் ரொக்கமாக செலுத்தி ரசீது பெற்றுக் கொள்ள வேண்டும். இவ்வாறு செலுத்துவதற்கு கால அவகாசம் ஏதும் அளிக்கப்படமாட்டாது.

இவ்வாறு முழுத் தொகையும் செலுத்தத் தவறினால் கோயில் நிர்வாகிகளால் நடத்தப்படும் ஏலம்/டெண்டர் தானாகவே ரத்தாகிறது என்பதையும், இதற்கு வேறு அறிவிப்போ அல்லது உத்திரவோ தனியாக கொடுக்கப்பட மாட்டாது என்பதையும் அறியவும். இதன் பின்னர் சம்மந்தப்பட்ட இனம் மறு ஏலம் / டெண்டர் மூலமாகவோ அல்லது ஏலம்/ டெண்டர் இல்லாமல் தனிப்பட்ட முறையிலோ விடப்பட்டால் முன் ஏலம் /டெண்டர்தாரர் தனது முன்வைப்புத் தொகையினை இழந்தவராகிறார். ஏலம்/ டெண்டர் அதனால் திருக்கோயிலுக்கு ஏதும் வருமான இழப்பு ஏற்பட்டால் இழப்பிற்கு காரணம் முன் ஏலம்/டெண்டர்தாரரே என கருத்திற்கொண்டு முன் ஏலதாரரிடமிருடந்து மேற்படி இழப்புத் தொகையும் வசூல் செய்ய சட்டப்பூர்வமான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை அறியவும். மறு ஏலத்தில் திருக்கோயிலுக்கு லாபம் ஏற்பட்டால் அதில் பங்கு கோர முன் ஏலதாரர்/டெண்டர்தாரருக்கு எவ்வித உரிமையும் இல்லை.

9. உரிமக் குத்தகைகளை இந்து சமயத்தினர் மட்டுமே ஏலம்/டெண்டர் மூலம் எடுக்க அனுமதிக்கப்படுவார்கள்.
10. திருக்கோயிலுக்கு பாக்கி செலுத்த வேண்டியவர்கள் கோயிலுக்கு எதிராக வழக்கு நடத்தியவர்கள் மற்றும் நடத்துபவர்கள் அவர்களின் உறவினர்கள் கோயிலின் நன்மைக்கு புறம்பாக செயல்பட்டவர்கள் அல்லது மேலே கண்ட வகையினருக்காக பினாமியாக கேட்பவரென திருக்கோயில் நிர்வாகிகளால் கருதப்படுவார்கள் மற்றும் 21 வயது முடியப் பெறாதவர்கள் ஏலம் கேட்க அனுமதிக்கப்படமாட்டார்கள். மேலும் பினாமி பெயரில் ஏலம் எடுத்து பிற நபர்கள், திருக்கோயில் பணியாளர்கள் எவர் எடுத்து நடத்துவதாக அறிந்தாலும் சம்மந்தப்பட்ட இனத்திற்கான குத்தகை உரிமம் முன் அறிவிப்பின்றி ரத்து செய்யப்படும்.
11. காரணம் எதுவும் கூறாமல் எந்த ஒரு கேள்வியையும் நிராகரிக்கவோ அல்லது ஏலம்/டெண்டர் ஒத்தி வைக்கவோ செயல் அலுவலருக்கு உரிமை உண்டு. உயர்ந்த கேள்வி கேட்டால் கூட திருக்கோயில் நலன் கருதி ஏலத்தை ரத்து செய்ய செயல் அலுவலருக்கு அதிகாரம் உண்டு.
12. இதர நிபந்தனைகள் ஏதுமிருப்பின் அவை பொது ஏலம்/டெண்டர் விடும் நேரத்தில் தெரிவிக்கப்படும்.
13. <u>காணிக்கை முடிசேகர உரிமம்–</u>
    1. காணிக்கை முடிகளை அவ்வப் பொழுது சேகரித்து எடுத்துக் கொண்டு முடிக்கொட்டகையை சுத்தமாக வைத்திருக்க உதவ வேண்டும்.
    2. சேவார்த்திகளின் எவ்விதமான புகாருக்கும் இடமளிக்கக் கூடாது.

14. உரிமம் சம்மந்தப்பட்ட வகையில் விற்பனை வரி, ஊராட்சி வரி மற்றும் வருமான வரி ஏதேனும் செலுத்த நேர்ந்தால் அதை சம்மந்தப்பட்ட உரிமதாரரே தமது சொந்தப் பொறுப்பில் செலுத்திக் கொள்ள வேண்டும்.
15. திருக்கோயிலின் நன்மையைக் கருத்திற் கொண்டு உரிமதாரர்களுக்கு அவ்வப்போது தேவைப்படும் உத்தரவுகள் பிறப்பிக்கவும், புகார்கள் ஏதும் பெறப்பட்டால் அதை விசாரித்து நடவடிக்கை எடுக்கவும் கோயில் செயல் அலுவலருக்கு உரிமை உண்டு.
16. உரிமம் தொகைகளில் எக்காரணத்தைக் கொண்டும் தள்ளுபடி எதுவும் அளிக்கப்படமாட்டாது. உரிமதாரருக்கு ராஜீகத்தாலும், தெய்வீகத்தாலும் ஏதேனும் இழப்பு ஏற்பட்டால் அதில் கோயிலுக்கு எவ்வித பொறுப்பும் இல்லை. எந்த ஒரு இனத்தையும் முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ உள் குத்தகைக்கு விடக்கூடாது.
17. உரிம காலம் முடிந்த பின் சம்மந்தப்பட்ட உரிமத்தின் உரிமதாரருக்கு பின் தொடச்சியோ அல்லது உரிமையோ கிடையாது.
18. ஏலம்/ டெண்டர் இறுதி முடிவு தெரிந்த அல்லது செயல் அலுவலரின் அறிவிப்பு கிடைத்த 7 நாட்களுக்குள் உரிமதாரர் சம்மந்தப்பட்ட இனத்திற்கு தன் சொந்தப் பொறுப்பில் சட்ட விதிகளின் படி ஒப்பந்தப்பத்திரம் எழுதி பதிவு செய்து கொடுக்க வேண்டும்.
19. மேற்கண்ட இனங்களுக்குரிய நிபந்தனைகள் ஏதேனும் மீறும் பட்சத்தில் ஏலம் / டெண்டர் எடுத்தவரின் உரிமம் முன்னறிவிப்புன்றி ரத்து செய்யப்பட்டு மறு ஏலம் / டெண்டர் நடத்தப்படும். மறு ஏலம் / டெண்டர் நடத்துவதால் திருக்கோயிலுக்கு ஏதேனும் இழப்பு ஏற்படின் அதற்கு முன் ஏலதாரரே பொறுப்பாவார். திருக்கோயிலுக்கு லாபம் ஏற்படின் அதில் பங்கு கேட்க ஏலதாரருக்கு எவ்வித உரிமையும் கிடையாது.
20. தேவை எனில் கூடுதல் நிபந்தனைகள் விதிக்க திருக்கோயில் செயல் அலுவலருக்கு முழு அதிகாரம் உண்டு.

இரா.ஞானசேகரன்,எம்,எஸ்சி.,பி,எல்.,
உதவி ஆணையர்/தக்கார்.

ர,கணபதிமுருகன், எம்,ஏ.,பி,எல்.,
செயல் அலுவலர்(கூ.பொ)